**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317 /2024**

**Deposition of P.W.** 8

Name : அனிஷ்குமார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.02.2026

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் மணலிக்கரை, ஆற்றுகோணத்தில் வசித்து வருகிறேன். நான் எலெக்ட்ரீசியனாக வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை மணலிக்கரை சந்தை அருகே வைத்து போட்டேன். சம்பவம் நடந்த இடத்தை போலீசார் பார்வையிட வந்த போது எங்களை சாட்சியாக வைத்து கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மணலிக்கரை சந்தியிலிருந்து – ஆற்றுக்கோணம் சிறிது தூரம் தான். காயம்பட்ட நபரை எனக்குத் தெரியாது. பார்வை மகஜரில் போலீசார் என்ன எழுதி இருந்தார்கள் என்று சொல்லி தான் தெரியும். போலீசார் வரும் போது காலை 08.45 மணி இருக்கும். மார்க்கெட் பக்கத்தில் உள்ள வீட்டிற்கு

எலெக்ட்ரீசியன் வேலைக்காக போய் இருந்தோம். நான் சொன்னதுபோல் கையொப்பம் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317/2024**

**Deposition of P.W.** 9

Name : சஜின்

S/o, D/o, W/o : கிறிஸ்துதாஸ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **11.02.2026**

Accused Produced

<u>முதல் விசாரணை</u>–

நான் வலியவிளையில் வசித்து வருகிறேன். எலெக்ட்ரீசியன் வேலை செய்கிறேன். சாட்சி அனிஷ்குமாரும் நானும் ஒன்றாக எலெக்ட்ரீசியன் வேலை பார்க்கிறோம். 06.06.2024ம் தேதி காலை 08.00 மணிக்கு சந்தை அருகே நானும், சாட்சி அனிஷ்குமாரும் எலெக்ட்ரீசியன் வேலை பார்த்து கொண்டிருந்தோம். போலீசார் விசாரணைக்கு வந்திருப்பதாகவும், சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் அப்போது தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மணவிக்கரை சந்தையிலிருந்து வடக்கானாடு 2 ½ கி.மீ துாரம்

இருக்கும்  நாங்கள் வேலை செய்த வீட்டின் உரிமையாளர் பெயர் தெரியாது.பார்வை மகஜரில் உள்ள இடம் எனக்கு நேரடியாக தெரியாது. காயம்பட்ட நபர் எனது நண்பர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.